JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.368/2012 Date: 16.03.2020. P.W. 1

பெயர் மனோகரன்
தந்தை பெயர், க/பெ ° கந்தசாமி
முகவரி °
கிராமம் °
மாவட்டம் °
ஜாதி °
தொழில் °
மதம் °
வயது °

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of March 2020.

**முதல் விசாரணையின் தொடர்ச்சி -**

எங்கள் நிறுவன மேனுவல் **அதசாஆ1**. அதசாஆ1ல் பக்கம் 33யிலிருந்து 35 வரை 1.57 பத்தில் காசாளரின் பணி பொறுப்பு மற்றும் கடமை **அதசாஆ2** வரிசை (3 பக்கங்கள்). எங்கள் நிறுவன கணக்கு மேனுவல் **அதசாஆ3**. அதசாஆ3ல் பக்கம் 3ல் பத்தில் 1.6ல் காசாளரின் செலுத்த வேண்டிய பிணை தொகை மற்றும் அவரின் தனி சிறப்பு தொகை பற்றிய விவரம் **அதசாஆ4**. 04.09.2008ம் தேதியிட்ட 7 மீட்டர் காம்பேக் துணி பி.கே.மேரா மற்றும் சியாம் ஒய்.சிங் மேரா ஆகியோருக்கான ரூ604 வங்கியில் செலுத்துவதற்காக எதிரியிடம் டி.சி.(ஸ்டோர்), கொடுத்த கவரிங் கடிதம் **அதசாஆ5**. அதே தேதியில் ரூ6,657யை வங்கியில் செலுத்துவதற்காக எதிரியிடம் டி.சி. ரோகினி ராஜா வழங்கியதற்கான உறை கடிதம் **அதசாஆ6.** எதிரி அந்த பணத்தை பெற்று கொண்டதற்காக எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கபடும் இன்காமிங் பேங்க் டிராப்ட் பதிவேட்டில் பதிந்து அதில் அதை தலைமை காசாளர் மற்றும் கணக்கு அதிகாரி ஆகியோர் கவுண்டர் சைன் செய்து உள்ளனர். 2008 முதல் 2009க்கான இன்காமிங் பேங்க் டிராப்ட் பதிவேட்டு **அதசாஆ7.** அதசாஆ7ல் 04.09.2008 வரிசை எண் 590ல் ரூ604 மற்றும் வரிசை எண் 591ல் ரூ6,657 ஆகியவற்றுக்காக எதிரியின் ஒப்புகை உடன் கூடிய பதிவுகள் முறையே **அதசாஆ8, 9.** மேற்படி 2 தொகைகளையும் சேர்த்து ரூ7, 261 ஆக வங்கி கணக்கில் செலுத்தபட்டது போல் எதிரி கையெழுத்தில் உள்ள ஸ்டேட் பேங்க் வங்கி 05.09.2008ம் தேதியிட்ட செலானியின் கொண்ட அடிகட்டையை புத்தகம் **அதசாஆ10.** மேற்படி 05.09.2008ம் தேதியிட்ட செலான் மட்டும் **அதசாஆ11.** அதசாஆ11ல் ஸ்டேட் பேங்க் வங்கியின் முத்திரை எதுவும் இல்லை. சி.ஆர்.பி.எப்யின் ஸ்டேட் பேங்கில் உள்ள 01.03.2008 முதல் 31.03.2009ம் தேதி வரையிலான வங்கி கணக்கு பட்டியல் **அதசாஆ12.** அதசாஆ12ல் மேற்படி தொகையை 05.09.2008ல் வங்கியில் செலுத்தியதாக எந்த வரவும் இல்லை. (கற்று அறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் அதசாஆ12 Banker Books Evidence Actல் சான்று அளிக்கபடாததால் ஏற்று கொள்ள கூடாது என்று ஆட்சேபித்து இது குறித்து தீர்ப்பு உரையின் போது முடிவு காணபடும் என்று ஆட்சேபணை உடன் குறியீடு செய்யபடுகிறது.) வங்கியில் பணத்தை செலுத்துவதற்கு முன்பு பேங்க் என்.சி.ஓ. டைரியில்

காசாளர் பணம் பெற்றதை பதிவு செய்து பின்னர் தான் வங்கியில் செலுத்துவார். அதசாஆ5ல் உறை கடிதம் பெற்ற பின்பு காசாளர் பணப்பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும். 01.07.2008 முதல் 12.10.2008 வரையிலான பணப்பதிவேடு **அதசாஆ13.** அதசாஆ13ல் 04.09.2008ல் ரூ604 மற்றும் ரூ6,657 ஆகியவை வரவு வைக்கபட்டதற்காக எதிரி ஏற்படுத்தி உள்ள பதிவுகள் முறையே **அதசாஆ14, 15.** ஆனால் எதிரி மேற்படி தொகைகளை வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்து உள்ளார். 10.09.2008ம் தேதி ரூ32,200யை டாக்டர். ஜெயபாலன் என்பவர் இம்பாலில் கூடுதல் தொகையாக பெற்றதை மீண்டும் அவர் ஜி.சி. இம்பாலுக்கு செலுத்த வேண்டி மருந்தாளுநர் பாஸ்கர் மூலம் எதிரியிடம் ஒப்படைக்கபட்டு உள்ளது. மேற்படி மருந்தாளுநர் கடிதத்துடன் கூடிய டி.ஐ.ஜி. மருத்துவ கண்காணிப்பாளரின் 10.09.2008ம் தேதியிட்ட உறை கடிதம் **அதசாஆ16 வரிசை (3 தாள்கள்)** ஆகும். அதசாஆ7ல் 10.09.2008ம் தேதி மேற்படி தொகை பெற்றதற்கான எதிரி செய்த பதிவு **அதசாஆ17.** அதசாஆ13ல் எதிரி அந்த தொகையை 10.09.2008ம் தேதியில் வரவு வைத்து உள்ள பதிவு **அதசாஆ18.** அதசாஆ10ல் 10.09.2008ம் தேதியிட்ட மேற்படி தொகையை வங்கியில் செலுத்தியது போல எதிரி ஏற்படுத்தி உள்ள வங்கி செலானின் அடிக்கட்டை **அதசாஆ19.** அதசாஆ12ல் மேற்படி பணப்பரிவர்த்தனைக்கான பதிவு எதுவும் இல்லை. எதிரி மேற்படி தொகையை வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்து உள்ளார். 23.10.2008ம் தேதி டி.சி.ரோகினி ராஜா ரூ84,000க்கான செல்ப் செக் காசோலை எண் 109513 ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா எனது அலுவலக வங்கி கணக்கின் காசோலையை வங்கியில் பணமாக பெறுவதற்காக எதிரியிடம் ஒப்படைக்கபட்டு உள்ளது. மேற்படி 29.09.2008 முதல் 31.12.2008 வரைக்கான காசோலை ரெக்காடு சிலிப் **அதசாஆ20** அதில் 23.10.2008ம் தேதியிட்ட மேற்படி காசோலைக்காக எதிரி ஏற்படுத்திய பதிவு மட்டும் **அதசாஆ21.** 18.09.2008ம் தேதி முதல் 03.12.2008ம் தேதி வரையிலான பேங்க் என்.சி.ஓ. டைரி **அதசாஆ22.** அதில் 23.10.2008ம் தேதியில் மேற்படி காசோலைக்கான பதிவு **அதசாஆ23.** மேற்படி காசோலை வங்கியில் செலுத்தபட்டு ரூ84,000 பணமாக பெற்று கொள்ளபட்டதிற்கான அதசாஆ12ல் உள்ள பதிவு **அதசாஆ24.** 13.10.2008 முதல் 28.01.2009 தேதி வரையிலான ரொக்க பதிவேடு **அதசாஆ25.** அதில் ரூ84,000 யாருக்கு வழங்க பட்டது என்று குறிப்புகள் இல்லை. எதிரி மேற்படி தொகையை கையாடல் செய்து உள்ளார். 14.11.2008ம் தேதி ரூ37,378யை பணமாக எதிரியிடம் அலுவலக வங்கி கணக்கில் செலுத்துவதற்காக வழங்கபட்டு உள்ளது. 14.11.2008ம் தேதியிட்ட ஏ.சி.ஆடம் என்பவர் வழங்கிய உறை கடிதம் **அதசாஆ26.** அதசாஆ7ல் வரிசை எண் 805ல் எதிரியால் பதிவு செய்யபட்டது. மேற்படி பதிவு **அதசாஆ27.** 17.11.2008ல் மேற்படி தொகையை வங்கியில் செலுத்தியது போல எதிரி ஸ்டேட் வங்கியின் அடிக்கட்டு ரசீதை தயார் செய்து உள்ளார். அந்த ரசீது **அதசாஆ28.** மேற்படி ரசீதில் வங்கியின் முத்திரை இல்லை. அதசாஆ22ல் 17.11.2008ல் மேற்படி தொகையை வங்கியில் செலுத்தியதற்கான குறிப்புகள் இல்லை. 17.11.2008ம் தேதியிட்ட பேங்க் என்.சி.ஓ. டைரி பதிவு **அதசாஆ29.** அதசாஆ12ல் 14.11.2008ல் வங்கியின் மேற்படி தொகை பரிவர்த்தனை செய்ததற்கான குறிப்புகள் இல்லை. எதிரி மேற்படி தொகையை வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்து உள்ளார். 07.03.2009ம் தேதி ரூ84,000க்கான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் என்னால் கையொப்பம் இட்ட செல்ப் செக் காசோலை எண் 696426 காசோலை பணம் ஆக்குவதற்காக ஒப்படைக்க பட்டு உள்ளது. எதிரி அதை உரிய நபர்களுக்கு செலுத்தாமல் கையாடல் செய்து உள்ளார். 31.12.2008ம் முதல் 28.03.2009 வரையிலான

காசோலை ரெக்காடு **அதசாஆ30.** அதில் 07.03.2009ம் தேதியிட்ட செல்ப் காசோலை கொடுக்கபட்டதற்கான பதிவு **அதசாஆ31.** அதசாஆ12ல் 07.03.2009ம் தேதி மேற்படி காசோலையை வங்கியில் செலுத்தி பணம் ஆக்கபட்டதற்கான பதிவு மட்டும் **அதசாஆ32.** 21.01.2009 முதல் 17.09.2009 வரையிலான பேங்க் என்.சி.ஓ. டைரி **அதசாஆ33.** அதில் 07.03.2009ல் வங்கியில் ரூ84,000த்தை பணமாக பெற்று கொண்டதற்கான பதிவுகள் உள்ளது. அந்த பதிவு **அதசாஆ34**. 31.01.2009 முதல் 26.04.2009 வரையிலான ரொக்க பதிவேடு **அதசாஆ35.** அதில் 07.03.2009ம் தேதி பணம் மேற்படி தொகை பட்டுவாடா செய்ததற்கான குறிப்புகள் காணப்படவில்லை அது **அதசாஆ36**. 01.04.2008 முதல் 31.03.2009 வரையிலான தணிக்கை செய்த போது ரூ35,316யை வங்கி கணக்கில் குறைவாக உள்ளது. அதற்கான தொகையை எதிரி கையாடல் செய்து உள்ளார். 2008 முதல் 2009 வரையிலான கிரேடிட் ஆடர் பதிவேடு **அதசாஆ37.** இந்த பதிவேட்டில் அலுவலக பரிவர்த்தனைகள் அனைத்தும் பதியபடும். மேற்படி நாள்களில் எதிரியிடம் ஒப்படைக்கபட்ட பணம் மற்றும் காசோலைக்கான பதிவுகள் எதும் அதில் காணப்படவில்லை. எதிரி மொத்தம் ரூ2,80,155 கையாடல் செய்து உள்ளார். இது குறித்து நான் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அதசாஆ38**. இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -நேரமின்மை காரணமாக ஒத்தி வைக்கபடுகிறது.**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur.